[2008 ஏப்ரல் 29

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதைக் கொண்டு வந்து, கே.சி.ஏ. கயிறு நார் மில் போன்ற நிறுவனங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கொடுக்கப்பட்ட முதலீட்டில் வாங்கிய அந்த மில் ஓட்டப்பட்டது. அதற்கு 20 சதவிகிதம் மானியம் 3 இலட்சம் ரூபாய் வழங்க இருந்ததை அந்த அரசு வழங்கவில்லை; இந்த அரசு, இந்த அமைச்சர் அதை வழங்குவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் பல்வேறு மானியங்களும் தொழில்களுக்கு நிறுத்தப்பட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். அதன்மூலம், ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்கு மானியம் தர வேண்டிய நிலையில், வெறும் 9 கோடி ரூபாய் மட்டுமே அவர்கள் வழங்கினார்கள். பாக்கித் தொகையை இந்த அரசு, கலைஞருடைய அரசு இப்போது வழங்கி வருகிறது. தாங்கள் கேட்ட அந்த மானியம் வழங்கப்படவில்லையென்றால், உரிய நடவடிக்கைகளை எடுத்து, விரைவிலே வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

176—

பட்டா

***839—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 29]

வேதாரண்யம் தொகுதி, ஆறுகாட்டுத்துறை மீனவக் கிராம மக்கள் குடியிருக்கும் இடத்திற்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அளிக்க விரும்புகின்றேன். ஆம். ஆறுகாட்டுத்துறையில் 400 மீனவர் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறை கிராமத்தில் 10.13 எக்டேர் நிலம், கடந்த 1923ஆம் ஆண்டு ரங்கசாமி மற்றும் 57 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருந்தது. ஆனால், 1987–ல் அப்பகுதியில் செல்வாக்குள்ள ஒரு நபர், அந்த 57 பட்டாக்களையும் தன்து பெயருக்கே போலியாக பட்டா மாற்றம் செய்துவிட்டார். தற்போது நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது. அது பொது மக்களுக்குச் சாதகமாக வந்திருக்கிறது. தற்போது அங்கே 777 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதில் 400 குடும்பங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளிலே தங்க வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நீதிமன்றத் தீர்ப்பு நமக்குச் சாதகமாக இருக்கின்ற காரணத்தால், உடனடியாக அந்த நிலத்தைப் பிரித்து, அந்தக் குடும்பங்களுக்கு, 58 குடும்பங்களுக்கும் பட்டா செய்து கொடுத்தால் அவர்களுடைய வாரிசுகள் அதைப் பிரித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். அங்கு குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்கள் இப்போது எந்தவிதப் பலனையும் அடைய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. வீட்டுக் கடன்கூட பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், தற்போது 3 இலட்சம் பட்டாக்கள் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 3 இலட்சத்து 98 ஆயிரம் பட்டாக்களை வழங்கி சாதனை படைத்திருக்கிற இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலத்தையும் பிரித்து பட்டா வழங்கி அந்த 777 குடும்பங்களும் பயன்பெற ஆவன செய்ய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் வேதாரண்யம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதாக இருந்து, ரங்கசாமி படையாச்சி மற்றும் 57 பேருக்கு, அந்தத் தேவஸ்தானப் பணிகளுக்காக ஏற்கெனவே 70, 80 ஆண்டு காலத்திற்கு முன்பாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதை நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திலே, சேதுபதி என்ற ஒருவர் தனது பெயருக்கு மாற்றியிருக்கிறார். இப்போது நீதிமன்றத்திலே நமக்கு சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நேற்றையதினமே, உடனே விரைந்து நடவடிக்கை எடுத்து, பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு அரசு அறிவுறுத்தி இருக்கிறது.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் நகரத்தில் அண்ணா நகர் என்ற பகுதியில் சுமார் 30/40 வருடங்களாக வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகளைக் கேட்டால், பட்டா ரெடியாகிவிட்டது, கூடிய விரைவில் கொடுத்துவிடுவோம் என்று எப்பொழுது பார்த்தாலும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், கடைசியிலே இப்பொழுது என்ன சொல்கின்றார்கள் என்றால், case இருக்கின்றது, அதனால் பட்டா கொடுக்க முடியாது என்று சொல்லி, பட்டா ரெடியான பிறகும் அவர்கள் கொடுக்காமல் காலதாமதம் செய்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, உடனடியாக case–ஐ முடிவுக்குக் கொண்டு வந்து அந்த மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அதுசம்பந்தமான விவரங்களை என்னிடத்திலே நேரிலே அளித்தால், அதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 177, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

177—

திருப்பணி

***30584—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை அருள்மிகு வல்லீஸ்வரர் ஆலயத் திருப்பணியை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை அருள்மிகு வல்லீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் எதுவுமில்லை. திருக்கோயிலில் உண்டியலும் நிறுவப்படவில்லை. இத்திருக்கோயிலுக்கு வருவாய் தரக்கூடிய இனங்கள் எதுவுமில்லை. மேலும், இத்திருக்கோயிலைப் புதுப்பிக்க அதிக அளவில் நிதியாதாரம் தேவைப்படும் நிலையில், திருப்பணி செய்வதற்கு கிராம மக்கள் எவரும் முன்வரவில்லை. பொதுமக்களின் பங்களிப்பு பெருமளவில் கிடைத்தால், துறையின் சார்பிலேயும் நிதியுதவி அளித்து திருப்பணிகள் மேற்கொள்ள இயலும்.